## நெல்லை மாவட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு தலைமையில் –

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### வழியெங்கும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் கலந்து கொள்ள செல்லும் வழியில், திருநெல்வேலி சந்திப்பில் சாலையின் இருபுறங்களிலும் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் கலந்து கொள்ள செல்லும் வழியில், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் கலந்து கொள்ள செல்லும் வழியில், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் கலந்து கொள்ள செல்லும் வழியில், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பின்போது, அங்கிருந்த சிறுமியுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டார்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இவ்விழாவில், நாடாளு மன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.மார்க்கண்டேயன், சி.சண்முகய்யா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன ஆகியோர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி விருந்தினர் இல்லத்தில், நேற்று (30.12.2024) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தூத்துக்குடியில் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள திருமதி புஸ்பம் அவர்கள் (வயது 87) தான் சேமித்து வைத்திருந்த 11 ஆயிரம் ரூபாயை வெள்ள நிவாரண நிதியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். இவ்விழாவில், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பி.ஜெகன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் ஆகியோர் உடனிருந்தனர்.



நேற்று (30.12.2024) தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைத்து, அதற்கான பற்றட்டைகளை (Debit Card) வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் மாணவிகள் செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.